[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2017 ஜூன் 29

7. தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, எரிசக்தி திறன் சேவை லிமிடெட் (EESL) உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்டு, அதனால் அடுத்த மூன்றாண்டுகளுக்கு 11,000 கோடி ரூபாய் முதலீட்டுடன் மாநிலத்தில் பயனுள்ள ஆற்றல் செய்திறன் நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ளவும், புதுப்பிக்கத்தக்க ஆற்றலை உயர்த்திடவும் மற்றும் புதைபடிவ எரிபொருள் நுகர்வினைக் குறைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(ஆ) தமிழகத்தில் தொழில் வளர்ச்சியினை மேம்படுத்துவது குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் தொழில் துவங்க தேவையான உகந்த சூழ்நிலையும், சிறப்பான திறன் வாய்ந்த மனித வளத்தினையும், 24 மணி நேரமும் கிடைக்கின்ற தரமான மின்சாரம், சுமுகமாகத் தொழில் தொடங்கி நடத்துவதற்கு அனைத்து சூழ்நிலைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது தமிழ்நாடு. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இந்தியாவிலேயே மகாராஷ்டிராவை அடுத்து இரண்டாவது இடத்தில் தமிழ்நாடு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தொழிற்சாலைகளின் எண்ணிக்கையிலும், தொழிற்சாலைகளில் பணிபுரிவோர் எண்ணிக்கையிலும், தமிழ்நாடு முதல் மாநிலமாகத் திகழ்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) புதிய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகள் பதிவு செய்வதிலும் தமிழ்நாடு முதல் மாநிலமாக விளங்குகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தொழில் துறையில் நிகர மதிப்புக் கூட்டல்படி தமிழ்நாடு மூன்றாம் இடத்தில் உள்ளது. தொழில் நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களின் மொத்த வருவாய் மதிப்பிலும், மொத்த ஏற்றுமதியிலும் மூன்றாம் இடத்தில் தமிழ்நாடு உள்ளது. வெளிநாட்டு நேரடி முதலீடுகளைப் பெறுவதில் தமிழ்நாடு முன்னிலை மாநிலமாக உள்ளது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசின் சார்பாக, தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியினை மேலும் மேம்படுத்த பின்வரும் அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

2017 ஜூன் 29] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

1. திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், புழுதிவாக்கம் மற்றும் வாயலூர் கிராமங்களிலுள்ள சுமார் 360 ஏக்கர் நிலப்பரப்பில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், மத்திய அரசின் தேசிய நெடுஞ்சாலை ஆணையக் குழுவுடன் இணைந்து ஒரு பல்முனை சரக்குப் போக்குவரத்து பூங்கா (Multi Modal Logistics Park) 1,295 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த பல்முனை சரக்குப் போக்குவரத்துப் பூங்காவை அமைப்பதால், போக்குவரத்து செலவுகள், வாகனங்களினால் ஏற்படும் மாசு மற்றும் சாலை நெரிசல் வெகுவாகக் குறைய வாய்ப்புள்ளது. இத்திட்டம் பொன்னேரி தொழில் முனைய (Ponneri Industrial Node) மேம்பாட்டுத் திட்டத்தின் கட்டமைப்பு வசதிகளை உள்ளடக்கிய ஒன்றாகும்.

2. தூத்துக்குடி மாவட்டம், மீளவிட்டான் கிராமத்தில் தேசிய நெடுஞ்சாலை எண் 45B-ன் புறவழிச்சாலையையொட்டி, 1,032 ஏக்கர் பரப்பளவில் சிப்காட் தூத்துக்குடி தொழில் வளாகம் நிலை–I உருவாக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. அப்பகுதியில் காணப்படும் தொழில் மனைகளுக்கான தேவையைக் கருத்தில்கொண்டும், கடல்வழி, வான்வழி மற்றும் இரயில்வழிப் போக்குவரத்து வசதிகளைக் கருத்தில்கொண்டும், சிப்காட் தொழில் வளாகம் நிலை–I-ஐ ஒட்டி, ஒட்டப்பிடாரம் வட்டத்தில், தெற்கு வீரபாண்டியபுரம் மற்றும் மீளவிட்டான் கிராமங்களில் சுமார் 1,600 ஏக்கர் பரப்பளவில் சிப்காட் தூத்துக்குடி தொழில் வளாகம் நிலை–II உருவாக்கப்படும். இவ்வளாகத்தினை மேம்படுத்தும்பொருட்டு, முதலாவதாக, 600 ஏக்கர் பரப்பளவுக்கு அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளான உட்புறச் சாலைகள், தண்ணீர் வழங்குவதற்கான ஏற்பாடுகள், மழைநீர் வடிகால், சாலையோர மரங்கள், தெரு விளக்குகள் மற்றும் பிற வசதிகள் 60 கோடி ரூபாய் செலவில், இரண்டு வருட காலத்திற்குள் உருவாக்கப்படும். இதன்மூலம் 500 கோடி ரூபாய் முதலீடும், 10 ஆயிரம் நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், 20 ஆயிரம் நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் உருவாகும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)